# சார்பு நீதிமன்றம், மேட்டூர்

முன்னிலை: திரு.S.முத்துராமன், B.L.,

சார்பு நீதிபதி, மேட்டூர்.

2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 05 ஆம் நாள் வியாழன்கிழமை
(நிகழும் பிலவ வருடம் ஆடி மாதம் 20ம் நாள்)

**CNR.NO: TNSA160002142020**

**அசல் வழக்கு எண்: 76/2020**

தமிழ்செல்வி ...வாதி

/எதிராக/

1. செல்லம்மாள்
2. சாரதாமணி
3. வெங்கடாஜலம் ...பிரதிவாதிகள்

இவ்வழக்கானது, 26.07.2021 அன்று இறுதியாக விசாரணைக்கு வரப்பெற்றபோது வாதிக்காக வழக்கறிஞர் திரு.L.ஸ்டாலின்ராஜா அவர்கள் முன்னிலையாகியும், முதலில் 1, 2 பிரதிவாதிகளுக்காக வழக்கறிஞர் திரு.V.ரணதேவ் அவர்களும், 3ம் பிரதிவாதிக்காக வழக்கறிஞர் திரு.K.பாரதி அவர்களும் ஆஜராகியிருந்தநிலையில், பின்னிட்டு 1 முதல் 3 பிரதிவாதிகள் அழைக்கப்பட்டு தோன்றாத காரணத்தினால் தோன்றா தரப்பினர்களாக்கப்பட்டும், வாதி தரப்பு சாட்சியங்களையும், சான்று ஆவணங்களையும் பரிசீலனை செய்தும், வாதி தரப்பு வாதுரைகளைக் கேட்டறிந்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

## தீர்ப்புரை

1) இவ்வழக்கு வாதியால் வழக்கிடை சொத்தினை 4 சமபாகங்களாக பிரிவினை செய்து அதில் ஒரு பாகத்தை வாதிக்கு ஒதுக்கீடு செய்து தனிசுவாதீனம் கொடுக்கும்படி பிரதிவாதிகளுக்கு எதிராக முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கக்கோரியும், தவறும்பட்சத்தில் நீதிமன்ற ஆணையரை நியமனம் செய்து இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பிக்கக்கோரியும், அவ்வாறு பாகம் ஒதுக்கி தனிசுவாதீனம் கொடுக்கும் காலம்வரை பிரதிவாதிகள் வழக்கிடை சொத்தினை வில்லங்க பாராதீனம் செய்யாமல் இருக்க உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் மற்றும் வழக்கு செலவுத்தொகை கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு இதுவாகும்.

2) வாதி தரப்பு வழக்குரையின் சுருக்கம் :

2.1) தாவா சொத்தானது சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், பி.என்.பட்டி கிராமத்தில் அமைந்துள்ளது. தாவா 1ம் பிரதிவாதியானவர் வாதியின் தாயார் ஆவார். 2 மற்றும் 3 பிரதிவாதிகள் வாதியின் உடன்பிறந்த சகோதர சகோதரிகள் ஆவார்கள். தாவா சொத்தானது ஆரம்பத்தில் வாதியின் தகப்பனாரான ராமசாமி என்பவருக்கு பாத்தியப்பட்ட பூர்வீக சொத்தாகும். மேற்படி ராமசாமி என்பவர் கடந்த 08.03.2011ம் தேதியன்று இறந்துவிட்டார். மேற்படி ராமசாமி இறக்கும்வரை தாவா சொத்தினை தனது சட்டப்படியான வாரிசுகளுடன் சொந்த சுவாதீன அனுபவத்தில் தாவா சொத்துக்களுக்குண்டான அனைத்து வரியினங்களையும் உரிய துறைக்கு செலுத்தி எவ்வித இடையூறுமின்றி கூட்டாக அனுபவம் செய்துவந்தார். மேற்படி ராமசாமி இறந்த பின்னிட்டு தாவா சொத்துக்களை வாதியும், பிரதிவாதிகளும் இறந்துபோன ராமசாமியின் சட்டப்படியான வாரிசுகள் என்ற முறையில் எவ்வித இடையூறுமின்றி கூட்டாகவே அனுபவம் செய்து, மேற்படி இறந்துபோன ராமசாமியின் பெயரிலேயே வருவாய்துறை ஆவணங்களை பராமரித்து உரிய துறைக்கு வரியினங்களை செலுத்தி அனுபவம் செய்துவந்தனர்.

2.2) தாவா சொத்து இந்து பாகம் பிரிக்கப்படாத கூட்டுக்குடும்ப சொத்தாகும். மேற்படி தாவா சொத்தினை வாதி, பிரதிவாதிகளுக்குள் கூட்டாக சுவாதீனம் செய்வதில் சிறுசிறு மனக்கசப்புகள் ஏற்பட்டு வந்ததால், 2ம் பிரதிவாதியானவர், வாதியின் மீதும், 1 மற்றும் 3 பிரதிவாதிகள்மீதும் கனம் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.204/2013 என்ற வழக்கினை பாகப்பிரிவினை பரிகாரம் கோரி தாக்கல் செய்தார். மேற்படி வழக்கின் வாதியான சாரதாமணியை அவரது தரப்பில் முதல் சாட்சியாக விசாரணை செய்து, அவரை மேற்படி அசல் தாவாவின் 1, 2 பிரதிவாதிகளான செல்லம்மாள், தமிழ்செல்வி ஆகியோர்தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டு, 3ம் பிரதிவாதியான வெங்கடாஜலம் என்பவரின் குறுக்கு விசாரணைக்காக வாய்தா போடப்பட்டிருந்தது. அந்த சமயத்தில் 3ம் பிரதிவாதியானவர் மேற்படி தாவாவினை சமரசமாக பேசி முடித்துக்கொள்ளலாம் என்று எடுத்துரைத்ததின்பேரில் வாதி சாரதாமணி, 1ம் பிரதிவாதி செல்லம்மாள் மற்றும் 2ம் பிரதிவாதி தமிழ்செல்வி ஆகியோர் சம்மதம் தெரிவித்தனர். அதன்பேரில் பல சமரச நீதிமன்றத்திற்கு சென்றும் 3ம் பிரதிவாதியான வெங்கடாஜலம் என்பவர் மேற்படி அசல் வழக்கு எண்.204/2013ஐ சமரசமாக முடித்துக்கொள்ளவில்லை. அதன்பிறகு 3ம் பிரதிவாதியான வெங்கடாஜலமும், வாதியான சாரதாமணியும் கூட்டுசேர்ந்துகொண்டு 27.01.2020ம் தேதியன்று நீதிமன்றத்திற்கு வராமல் மேற்படி பாகப்பிரிவினை தாவாவினை தள்ளுபடிக்கு விட்டுவிட்டார்கள். மேற்படி தாவாவில் 3ம் பிரதிவாதியானவர் பி.என்.பட்டி கிராம சர்வே எண்.179/3இ–ல் உள்ள பு.ஏ.0.49.0 நிலமானது 3ம் பிரதிவாதியான வெங்கடாஜலம் என்பவர் பெயரில் தனி பட்டா உள்ளதால் அவருக்கு

சுயார்ஜிதமாக பாத்தியப்பட்டது என்று குறிப்பிட்டுள்ளது தவறான சங்கதியாகும். மேற்படி சர்வே எண்ணும், இறந்துபோன ராமசாமி என்பவரின் கூட்டுக்குடும்ப சொத்துக்களின் ஒரு பகுதியே ஆகும். மேற்படி சர்வே எண்ணில் கண்டுள்ள சொத்தை மட்டும் 3ம் பிரதிவாதியான வெங்கடாஜலம் என்பவர் குடும்பத்தார்களுக்கு தெரியாமல் தவறான முறையில் அவரது பெயரில் பட்டா பெற்றுள்ளாரே தவிர தாவா சொத்தின் சுவாதீனமானது கூட்டாகத்தான் இன்றுவரை இருந்து வருகிறது.

2.3) இந்நிலையில் இவ்வழக்கின் வாதியானவர் தாவா சொத்தில் 1/4 பங்கு பெற உரிமையுடையவராவார். தற்பொழுது பிரதிவாதிகள் அனைவரும் கூட்டாக சேர்ந்து கொண்டு இந்த வாதிக்கு தாவா சொத்தில் சட்டப்படி சேரவேண்டிய 1/4 பங்கினை ஏமாற்றும் நோக்கத்தோடு செயல்பட்டு வருகிறார்கள். வாதி கடந்த 09.02.2020 அன்று ஊர் பஞ்சாயத்தார்கள் மற்றும் உறவினர்களை வைத்து பிரதிவாதிகளிடம் பாகப்பிரிவினை குறித்து கேட்டபோது, பிரதிவாதிகள் எந்தவொரு காரணமும் இல்லாமல் பாகம் பிரித்துக்கொடுக்க முடியாது எனக் கூறிவிட்டார்கள். இந்நிலையில் வாதியை ஏமாற்றும் கெட்ட நோக்கத்துடன் பிரதிவாதிகள் அனைவரும் ஒன்று சேர்ந்துகொண்டு தாவா சொத்தை 3ம் நபர்களுக்கு விற்க முயற்சி செய்து வருகிறார்கள். எனவே தாவா சொத்தில் வாதிக்கு சட்டப்படி கிடைக்கவேண்டிய 1/4 பாக சொத்தினை நலந்திகடு கலந்து பிரித்து தனிசுவாதீனம் கொடுக்கும்படி முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்ககோரியும், அதனையொட்டி இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பிக்ககோரியும், தனி சுவாதீனம் மற்றும் நிரந்தர தடையுத்தரவு பரிகாரம் கோரியும் வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதாகும்.

3) பிரதிவாதிகள் இந்நீதிமன்ற அழைப்பாணையை பெற்றுக்கொண்டு வழக்கறிஞர் மூலமாக ஆஜராகி இருந்தபோதிலும், இவ்வழக்கினை முன்னின்று நடத்த எதிர்வழக்குரை ஏதும் தாக்கல் செய்யாததால், அவர்களை இந்நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டு ஆஜராகவில்லை என்பதால், மேற்படியார்கள் மீது 03.02.2021 அன்று ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

4) இவ்வழக்கில் வாதிதரப்பில் அவர்தரப்பு வழக்கினை நிரூபிக்க வாதி திருமதி.தமிழ்செல்வி, க/பெ.பழனியப்பகவுண்டர் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அவர்மூலமாக வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.12 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. பிரதிவாதிகள் தரப்பில் வாய்மொழி சாட்சியங்களோ, ஆவண சாட்சியங்களோ முன்னிலைப்படுத்தப்படவில்லை.

5) வாதி தரப்பில் ஆஜரான கற்றார்ந்த வழக்கறிஞர் அவர் தரப்பு வாதத்தில் வா.சா.1 சாட்சியத்தின் மூலமாகவும், வா.சா.ஆ.1 முதல் 12 வரையிலான ஆவணங்கள் மூலமாகவும் வழக்கிடை சொத்து மூதாதையர் சொத்து என்ற சங்கதியும், கூட்டு குடும்ப சொத்து என்ற சங்கதியும் நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும், இவ்வழக்கு வாதி மற்றும் பிரதிவாதிகள் இறந்துவிட்ட ராமசாமி என்பவரின் வாரிசுகள் என்ற சங்கதி நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும், எனவே மேற்படி ராமசாமி என்பவரின் இறப்பிற்கு பின்னிட்டு வாதி மற்றும் பிரதிவாதிகளுக்கு வழக்கிடைச் சொத்தில் தலா 1/4 பங்குரிமை உள்ளது என்றும், எனவே, வாதி கோரியபடி பாகப்பிரிவினை, தனி சுவாதீனம், நிரந்தர உறுத்துக்கட்டளை மற்றும் இதர பரிகாரங்களுக்கு தீர்ப்பு வழங்க வேண்டும் என வாதுரைக்கப்பட்டது.

6) இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை என்னவென்று பார்வையிட்டதில், வாதி வழக்குரையில் கோரியபடி பாகம் பெற தகுதி கொண்டவரா, வாதி கோரியுள்ள பாக வீதம் சரியானதா, வாதி கோரிய நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் அவருக்கு கிடைடிக்கத்தக்கதா என்பதே தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை ஆகும்.

7) இவ்வழக்கில் வாதிக்கு வழக்கிடை சொத்துக்களில் பாக உரிமை உள்ளது என்பதனை நிரூபிக்க வா.சா.ஆ.1 முதல் 4 வரையிலான ஆவணங்களான நில உரிமை பட்டாக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பட்டா ஆவணங்களின் அடிப்படையில் வாதியின் தகப்பனாரான ராமசாமி என்பவருக்கு பாக உரிமை உள்ளது என்ற சங்கதி அறிய முடிகிறது. வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வா.சா.ஆ.9 ஆவணத்தின் அடிப்படையில் வாதி மற்றும் பிரதிவாதிகளின் தந்தையான ராமசாமி என்பவருக்கும் அவரது சகோதரருக்கும் இடையே பாகப்பிரிவினை ஏற்பட்டுள்ளது என்ற சங்கதியும், வழக்கிடை சொத்து மூதாதையர் சொத்து என்ற சங்கதியையும் அறிந்துகொள்ள முடிகிறது. மேலும், ராமசாமி என்பவர் இறந்துவிட்டபிறகு அவருக்கு பாத்தியப்பட்ட வழக்கிடைச் சொத்தை அனுபவிக்க அவரது வாரிசுகளான வாதி மற்றும் பிரதிவாதிகளுக்கு உரிமமூலம் உள்ளது என்ற சங்கதி அறியமுடிகிறது. மற்ற ஆவணங்களின் அடிப்படையில் இவ்வழக்கினை வாதி தாக்கல் செய்ய போதுமான முகாந்திரம் உள்ளது என்ற சங்கதியும் அறிந்துகொள்ள முடிகிறது. இதுமட்டுமல்லாமல் இந்நீதிமன்ற அறிவிப்பினை பெற்றுக்கொண்டதற்கு பின்னிட்டு பிரதிவாதிகள் இந்நீதிமன்றத்தில் ஆஜராகி வாதிக்கு பாக உரிமை இல்லை என எந்தவொரு எதிர்வாதமும் ஆட்சேபனை செய்து எழுத்து மூலமாகவோ, வாய்மொழி மூலமாகவோ முன்னிலைப்படுத்தவில்லை. இந்நிலையில் இந்நீதிமன்றம் வாதிக்கு வழக்கிடை சொத்தில் பாக உரிமை உள்ளது என்றே தீர்மானிக்கிறது.

7(1). எனவே, வாதி அவர்தரப்பு வழக்கினை ஆவணங்கள் மற்றும் சாட்சியங்கள் மூலம் தெளிவுபடுத்தியுள்ளார் என்றே அறிய முடிகிறது. மேலும், வாதிதரப்பு ஆவண மற்றும் வாய்மொழி சாட்சியங்களை மறுத்து பிரதிவாதிகள் தரப்பில் எந்தவிதமான ஆட்சேபனைகளும் தெரிவிக்கப்படவில்லை. அவர்கள் இவ்வழக்கில் ஆஜராகி எந்தவித எதிருரையும் தாக்கல் செய்யவில்லை. மேலும், வாதி அவர்தரப்பு வழக்கை நிரூபிக்க தாக்கல் செய்யப்பட்ட வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.12 வரையிலான ஆவணங்கள் ஏற்புடைத்த ஆவணங்களாக அமையப்பெற்றுள்ளன. அவைகள் அடிப்படையில் பார்க்கும்போது, வாதி வழக்குரையில் கோரியபடி தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை பெற தகுதி கொண்டவர் என அறிய முடிகிறது. மேலே கண்ட விவாதத்தின் அடிப்படையில், வாதி இவ்வழக்கில் கோரியபடி பாகப்பிரிவினை, தனிசுவாதீனம் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் பெற தகுதி கொண்டவர் என தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை வழங்கலாம் என இவ்வழக்கு பிரச்சினைகளுக்கு முடிவு காணப்படுகிறது.

8)

இறுதியாக,

1) இவ்வழக்கு வாதி வழக்குரையில் கோரியுள்ளபடி அனுமதிக்கப்பட்டு, பிரதிவாதிகள் வழக்கிடை சொத்துக்களை நலம்திகடு கண்டு நான்கு சம பாகங்களாக பிரிவினை செய்து, அதில் ஒரு பாகத்தை வாதிக்கு ஒதுக்கி தனி சுவாதீனம் கொடுக்க முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்படுகிறது. தவறும்பட்சத்தில் உரிய நீதிமன்ற நடவடிக்கை மூலமாக இறுதிநிலை தீர்ப்பாணைக்கு மனு செய்ய வாதி உரிமை கொண்டவர் என தீர்ப்பளிக்கப்படுகிறது.

2) மேற்படி பாகப்பிரிவினை செய்து, வாதிக்கு தனி சுவாதீனம் ஒப்படைக்கும் காலம் வரை வழக்கிடைச் சொத்துக்களைப் பொறுத்து வாதியின் பாகத்தையும் சேர்த்து பிரதிவாதிகளோ அவர்களது ஆட்களோ எவ்விதமான வில்லங்கபாராதீனத்திற்கும் உட்படுத்தக்கூடாது என உறுத்துக்கட்டளைக்கு ஆணையிட்டு தீர்ப்பளிக்கப்படுகிறது.

3) இவ்வழக்கின் செலவுத் தொகைகளை பிரதிவாதிகள் வாதிக்கு செலுத்த வேண்டும் என்று தீர்ப்பளிக்கப்படுகிறது.

இந்த தீர்ப்பானது என்னால் நேரடியாக சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் பிழைகள் சரி செய்யப்பட்டு என்னால் இந்நீதிமன்றத்தில் 2021–ஆம் வருடம் ஆகஸ்ட் மாதம் 05–ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

ஒம்/– S.முத்துராமன்
சார்பு நீதிபதி, மேட்டூர்.

<u>வாதி தரப்பு சாட்சி :</u>

வா.சா.1 திருமதி.தமிழ்செல்வி, க/பெ.பழனியப்பகவுண்டர்

<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்:</u>

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | 05.09.2013 | கணிணி பட்டா எண்.1341 | அசல் |
| வா.சா.ஆ.2 | 05.09.2013 | கணிணி பட்டா எண்.1467 | கணிணி நகல் |
| வா.சா.ஆ.3 | 03.06.2020 | கணிணி பட்டா எண்.1341 | கணிணி நகல் |
| வா.சா.ஆ.4 | 03.06.2020 | கணிணி பட்டா எண்.1467 | கணிணி நகல் |
| வா.சா.ஆ.5 | 10.09.2013 | அசல் வழக்கு எண்.204/2013 வழக்குரை | சான்று நகல் |
| வா.சா.ஆ.6 | 17.04.2014 | அசல் வழக்கு எண்.204/2013 3 ம் பிரதிவாதி தாக்கல் செய்த பதிலுரை | சான்று நகல் |
| வா.சா.ஆ.7 | 04.02.2014 | அசல் வழக்கு எண்.204/2013 1 ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டு 2 ம் பிரதிவாதியால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பதிலுரை | சான்று நகல் |
| வா.சா.ஆ.8 | 24.01.2020 | அசல் வழக்கு எண்.204/2013 ன் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை | சான்று நகல் |
| வா.சா.ஆ.9 | 28.10.2003 | பாகப்பிரிவினை பத்திரம் | சான்று நகல் |
| வா.சா.ஆ.10 | 10.06.2020 | வில்லங்க சான்றிதழ் | கணிணி நகல் |
| வா.சா.ஆ.11 | – | வாதியின் ஆதார் அட்டை அசலுடன் ஒப்பிடப்பட்டது | போட்டோ நகல் |
| வா.சா.ஆ.12 | 06.08.2020 | வழக்கு சொத்து குறித்து வழிகாட்டி மதிப்பு | கணிணி நகல் |

<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:</u> இல்லை

ஒம்/– S.முத்துராமன்
சார்பு நீதிபதி,
மேட்டூர்.